මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: PFD/RED/REG/CIR/2022/01
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.12.20

அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் : 01/2020 (ii)

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளது தலைவர்கள்

**1992 நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கான திருத்தங்களை மேற்கொள்ளல்தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரச நிதி மற்றும் திறைசேரி செயற்பாடுகள் சுற்றுநிருபங்களை ஒன்றுசேர்த்து பயன்பாட்டிற்கு இலகுவான வகையில் தனியொரு சுற்றுநிருபமாக வெளியிடுதல்**

2022.12.08ஆந் திகதி இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2023ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரேரணைகளின் 35.1ஆம் பிரேரணைக்கமைய, 2020, 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் சேவை வழங்கலுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை அதிகரிக்காத, அனைத்து நிறுவனங்களாலும் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக, தற்போது அறவிடப்படுகின்ற பல்வேறு கட்டணங்களை 2023 ஜனவரி 01ஆந் திகதி தொடக்கம் 20%இனால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதனடிப்படையில், 2020.08.28ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் பகுதி IIஇன் 5ஆம் பந்தி – **'அரச சேவைகளை வழங்குவதற்காக நிறுவனங்கள் அறவிடும் கட்டணங்களைத் திருத்துதல்'** என உள்ள பகுதி கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் திருத்தியமைக்கப்பட்டு இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுவதுடன், 2023ஆம் ஆண்டில் அரச நிறுவனங்களால் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களைத் திருத்தியமைப்பதற்காக, 2023.01.01ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவிலுள்ளவகையில் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்ததல் வேண்டும்.

**"5. அரச சேவைகளை வழங்குவதற்காக நிறுவனங்கள் அறவிடும் கட்டணங்களைத் திருத்துதல்**

5.1 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சேவை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற பல்வேறு கட்டணங்களை அதிகரிப்புச் செய்யாத அனைத்து அரச நிறுவனங்களும் உரிய நிரல் அமைச்சின் செயலாளரது அனுமதியைப் பெற்று அந்த கட்டணங்களை 20% ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5.2 பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினாலோ அல்லது எந்தவொரு சட்டத்தினாலோ, கட்டணங்களைத் திருத்துவதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு, அந்தச் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதத்தில் பிரேரிக்கப்பட்ட கட்டணங்களைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

5.3 மேலே 5.1 இன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் தொடர்பில் 2023.03.31ஆந் திகதிக்கு முன்னரும் மேலே 5.2இன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் தொடர்பில், அந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும், உரிய படிவத்தின் ஊடாக அரச நிதி திணைக்களத்திற்கு அறிக்கை செய்தல் வேண்டும். மேலும், அரச நிறுவனங்களால் 2020, 2021, மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஏலவே மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டணங்களது திருத்தம் தொடர்பில் 2023.01.31ஆந் திகதிக்கு முன்னர் உரிய படிவத்தின் ஊடாக அரச நிதித் திணைக்களத்திற்கு அறிக்கை செய்தல் வேண்டும். உரிய படிவத்தை அரச நிதித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

5.4 அரசாங்க நிறுவனத்தினால் ஏதேனும் புதிய கட்டணமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமானால், அந்நிறுவனத்தினால் உரிய நிரல் அமைச்சின் கௌரவ அமைச்சர் ஊடாக, அது தொடர்பாக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பெறுதல் வேண்டும்.”

03. இச்சுற்றுநிருபம் தொடர்பில் மேலும் விளக்கங்கள் அவசியமெனின் 011-2484614 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தை தொடர்புகொள்ள முடியும்.

**ஒப்பம்/ கே.எம். மஹிந்த சிறிவர்தன**

திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்: 01. சனாதிபதியின் செயலாளர்
02. பிரதம மந்திரியின் செயலாளர்
03. அமைச்சரவையின் செயலாளர்
04. கணக்காய்வாளர் தலைமையதிபதி

வழிகாட்டல் இலக்கம் 10
அ.நி.சு. 01/2020 (ii) இன் 5.3 ஆம் பந்தி

அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பகுதி II இன் 5.4 ஆம் பந்தியின் கீழ் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல் இலக்கம் 10 அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 (ii) இன் 5.3 ஆம் பந்தியின் கீழ் வெளியிடப்படுகின்ற இந்த வழிகாட்டல் இலக்கம் 10இன் ஊடாக திருத்தப்படுகின்றது.

**அரச நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களது திருத்தம் தொடர்பிலான விபரங்களை அறிவிப்பதற்கான படிவம்**
**அ.நி.சு. 01/2020 (ii) இன் 5.3 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட வகையில்**

1. அமைச்சரவை அமைச்சு:
2. இராஜாங்க அமைச்சு:
3. திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயர்:
4. கட்டணத்தை அறவிடும் அதிகாரம்: பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் / வர்த்தமானி அறிவித்தல் / பிற:

    (பிற ஏதேனும் விதத்தினால் கட்டணங்களை அறவிடும் அதிகாரம் கிடைக்கப்பெற்றிருந்தால் உரிய விபரங்களை இணைப்பின் ஊடாக சமர்ப்பிக்கவும்)
5. முதல் தடவையாக கட்டணம் அறவிடப்பட்ட வருடம்:
6. இறுதியாக கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட வருடம்:
7. கட்டணங்களது திருத்தம் தொடர்பாக எந்தப் பிரிவின் கீழ் தகவல்கள் வழங்கப்படுகின்றன என்பது:

    (அரச நிதி சுற்றறிக்கை 01/2020 (ii) இன் 5.1ஆம் அல்லது 5.2ஆம் பந்தியின் கீழ் கட்டணத் திருத்தங்களை அறிக்கை செய்தல் / 2020-2022ஆம் ஆண்டிற்கான கட்டணத் திருத்தங்களை அறிக்கை செய்தல்)
8. கட்டண திருத்தங்கள் தொடர்பான தகவல்களை, 8.1 மற்றும்/அல்லது 8.2 அட்டவணையின் ஊடாக சமர்ப்பிக்கவும்.

8.1 2023ஆம் ஆண்டிற்கான கட்டண திருத்தங்கள் தொடர்பில் அறிவித்தல்.

| I | II | III | IV | V | VI | |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | வழங்கப்படும் சேவைகள் | இறுதியாக கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்ட வருடம் | இறுதியாகக் காணப்பட்ட கட்டணங்கள் (ரூ.) | 2023 திருத்தப்பட்ட கட்டணங்கள் (ரூ.) | அந்த வருமானத்தை வரவு வைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வருமானத் தலைப்பு | |
| | | | | | அமை / திணை / மா.செ | பிற நிறுவனங்கள் |
| | | | | | | |

8.2. 2020-2022 ஆம் ஆண்டுகளுக்காக இதுவரை திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக அறிவித்தல்.

| I | II | III | IV | | V | | | VI | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்ட வருடம் | வழங்கப்படுகின்ற சேவைகள் | திருத்தப்பட்ட கட்டணங்கள் | | 2020-2022 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட மொத்த வருமானம் (ரூ.) | | | அந்த வருமானம் வரவு வைக்கப்பட்ட வருமானத் தலைப்பு | |
| | | | பெறுமதி தொடக்கம் - வரை | சதவீதம் | 2020 | 2021 | 2022 | அமை / திணை / மா.செ | பிற நிறுவனங்கள் |
| | | | | | | | | | |

ஒப்பம்/ ஜே.சீ.வெலிகமகே
அரச நிதி பணிப்பாளர் நாயகம்

J.C. Weligamage
Director General Public Finance
Department of Public Finance
General Treasury
Colombo 01.

அரச நிதி பணிப்பாளர் நாயகம், அரச நிதி திணைக்களம், நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, செயலகம், கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி : 94 11 2484614/ தொலைநகல்: 94 11 2434458/ மின்னஞ்சல்: dgpf@pfd.treasury.gov.lk